பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 26 ஞாயிற்றுக்கிழமை 07.02.2021 கதிர் 325

## தமிழ் - முஸ்லிம் உறவுக்கு பாலமாக அமைந்த பேரணி

### நீதியை வழங்குவது ஐ.நாவின் கடமை என்கிறார் ரிஷாத் எம்.பி.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான நீதிக்கான எழுச்சிப் பேரணி தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவுக்குப் பாலமாக அமைந்துள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் 2

### விண்ணதிர உரிமைக் கோஷங்களை எழுப்பியவாறு

# பொலிகண்டியை வந்தடைந்தது பேரணி; பல்லாயிரக் கணக்கானோர் அணிதிரள்வு

### ஆயிரக் கணக்கான வாகனங்களும் பவனி



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

**பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரெழுச்சிப் பேரணி பல்லாயிரக் கணக்கானோரின் ஆதரவுடன் பொலிகண்டியை இன்று மாலை வந்தடைந்தது.** 2

## ரயிலில் மோதி ஆசிரியர் சாவு!

### அரியாலையில் சம்பவம்



யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் ரயிலுடன் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் ஆசிரியரான வி.பாலரூபன் என்பவரே, அரியாலை நாவலடியில் ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

கடுகதி ரயிலுடன் மோதுண்டே உயிரிழப்பு இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.






## தியாகி திலீபன் நினைவிடத்தில் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி!

### முள்ளிவாய்க்காலில் எடுக்கப்பட்ட கைப்பிடி மண் யாழ். பல்கலைக்கழக மாணவர்களிடம் கையளிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் கலந்துகொண்டோர் யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியில் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தினர். 2

## 1,406 பேர் கைது!

மேல் மாகாணத்தில் நேற்று நடத்தப்பட்ட விசேட பொலிஸ் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 1,406 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கமைய நேற்றுக் காலை 6 மணி முதல் பிற்பகல் 4 மணி வரையில் இந்தச் 2

## மனித உரிமை தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு செயலராக சிவஞானசோதி



சுயாதீன மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயலாளராக வே.சிவஞானசோதி, ஜனாதிபதி 2

## சிங்கள - பௌத்த மக்களைச் சீற்றமடையச் செய்யாதீர்!



### தமிழ்பேசும் மக்களை இப்படி எச்சரிக்கின்றது கோட்டா அரசு

சிங்கள - பௌத்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களால் பேரணியில் கோஷங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. இது சிங்கள மக்களை சீற்றமடையச் செய்யும் செயலாகும்.

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 2

## தமிழ் - முஸ்லிம் உறவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன். நீதிக்கான எழுச்சிப் பேரணி தொடர்பில் ஊடகம் ஒன்றிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறுபான்மை இன மக்களை இலக்கு வைத்து இந்த அரசு மோசமான அடக்குமுறைகளைப் பிரயோகித்து வருகின்றது. இதற்கு எதிராகவும் ஐ.நாவிடம் நீதி வேண்டியும் வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புகளும் தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மாபெரும் கவனவீர்ப்புப் பேரணிக்கு எமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் ஆதரவு வழங்கி அறிக்கை வெளியிட்டிருந்தது. அத்துடன் இந்தப் பேரணியில் முஸ்லிம் மக்கள் தவறாது பங்கேற்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையூடாக நாம் அழைப்பு விடுத்திருந்தோம்.

இந்தநிலையில், எமது அழைப்புக்கிணங்கவும் அரசுக்கு எதிரான தங்கள் மனக்குமுறல்களைப் பகிரங்கமாக வெளிப்படுத்தும் வகையிலும் முஸ்லிம் மக்கள், முஸ்லிம் அரசியல்வாதிகள் ஆகியோர் இந்த எழுச்சிப் பேரணியில் பங்கேற்றுள்ளனர்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் பெருந்திரளான முஸ்லிம்கள் வீதியில் இறங்கி பேரணியில் பங்கேற்று தமது முழு ஆதரவை வழங்கியுள்ளனர். தமிழ் மக்களுடன் கைகோர்த்து எமக்கான உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்தில் பங்கேற்ற ஒட்டுமொத்த முஸ்லிம்களுக்கும் எனது கட்சி சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான நீதிக்கான இந்த எழுச்சிப் பேரணி தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவுக்குப் பாலமாக அமைந்துள்ளது. தமிழ் - முஸ்லிம் சமூகத்தின் இந்தப் பேரெழுச்சியைப் பார்த்தாவது இலங்கை அரசின் அடக்குமுறைகளால் பாதிக்கப்பட்ட சிறுபான்மை இனமக்களுக்கு நீதியை வழங்க ஐ.நா. முன்வரவேண்டும். இது ஐ.நாவின் கடமையாகும். - என்றார்.

## சிங்கள - பௌத்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது

'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற கொள்கையுடன் செயற்படும் அரசு நாட்டு மக்களை சிங்களம், தமிழ், முஸ்லிம் என்று வேறுபடுத்திப் பார்க்கவில்லை.

ஆனால், தமிழ், முஸ்லிம் சமூகம்தான் நாட்டின் சட்ட திட்டங்களை மீறி, நீதிமன்ற உத்தரவுகளை மீறி போராட்டங்களை நடத்தி இன்று இரண்டு இனங்களுக்கிடையில் பிளவுகள் இருக்கின்றன என்று சர்வதேசத்துக்குப் பொய்ப்பித்தலாட்டம் ஆடுகின்றன.

இந்த நாட்டில் பிரச்சினை இருந்தால் அதனை அரசுதான் தீர்க்க வேண்டுமே தவிர சர்வதேசத்தால் அதனைத் தீர்க்க முடியாது. பேரணி ஏற்பாட்டாளர்கள் இதனைக் கவனத்தில்கொள்ள வேண்டும் - என்றார்.

## தியாகி திலீபன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு முன்னதாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வாயிலுக்குச் சென்ற பேரணி, முள்ளிவாய்க்காலில் எடுக்கப்பட்ட கைப்பிடி மண்ணை, பல்கலைக்கழக வளாகத்தில் மீண்டும் அமைக்கப்படவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்குப் பயன்படுத்த மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து திலீபனின் நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்திய பின்னர் வடமராட்சி - பொலிகண்டி நோக்கிப் பேரணி தொடர்ந்தது.

வடக்கு, கிழக்கு சமயத் தலைவர்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இணைந்து தமிழ்பேசும் மக்களை அணிதிரட்டி இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

## மனித உரிமை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டாபய ராஜபக்ஷவால் நிய மிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் அமைக்கப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை மீளாய்வு செய்து அரச கொள்கைக்கு அமைவாக அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளுதல் இந்த ஆணைக்குழுவின் நோக்கமாகும்.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பல்வேறுபட்ட அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் செயலாளராக கடமையாற்றிய சிரேஷ்ட அரச அலுவலர் வே.சிவஞானசோதி, இந்த ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தற்போது பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் கடமையாற்றி வருகின்றார்.

இந்த ஆணைக்குழுவில் உயர் நீதிமன்ற நீதியரசர் உள்ளடங்கலாக 3 உறுப்பினர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 1,406 பேர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது கைதுசெய்யப்பட்டவர்களில் நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 681 பேரும், குற்றச் செயல்கள் தொடர்பாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த 44 பேரும் அடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பொலிகண்டியை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்பேசும் மக்கள் மீதான இலங்கை அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்தும், சர்வதேசத்திடம் நீதி கோரியும் வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புகள், தமிழ்க் கட்சிகள் மற்றும் முஸ்லிம் கட்சிகள் என்பவற்றின் ஒன்றிணைந்த ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட பேரெழுச்சிப் பேரணி, ஐந்தாம் நாளான இன்று காலை கிளிநொச்சி நகரிலிருந்து ஆரம்பித்தது. நண்பகல் யாழ்ப்பாணம் மாவட்ட எல்லையை அடைந்தபோது மக்கள் அணிதிரண்டு பேரணியை வரவேற்றனர்.

அதன்பின்னர் சாவகச்சேரி நகரைப் பேரணி அடைந்ததும் அங்கு மக்கள் தீப்பந்தம் ஏந்திப் பேரணியை வரவேற்றதுடன் மேலும் பெருமளவானோர் அதனுடன் இணைந்துகொண்டனர்.

அதேபோன்று செம்மணிப் பகுதியிலும் பெருமளவான மக்கள் கூடி நின்று பேரணியை வரவேற்றனர்.

பேரணி யாழ்ப்பாணத்தை அடைந்ததும் யாழ். பொதுநூலகம், உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவிடம், யாழ். பல்கலைக்கழகம், நல்லூர் தியாக தீபம் திலீபன் நினைவிடம் ஆகிய இடங்களின் ஊடாகப் பொலிகண்டியை வந்தடைந்தது.

இறுதிப் பேரணியில் பல்லாயிரக் கணக்கான தமிழ்பேசும் மக்கள் பங்கேற்று விண்ணதிர உரிமைக் கோஷங்களை எழுப்பினர். இந்தப் பேரணியில் ஆயிரக் கணக்கான மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட வாகனங்களும் பவனி வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# அர்த்தமற்ற காரணங்கள்

**மிகவும் மோசமான கட்டத்தை அடைந்திருக்கின்றது இலங்கை – இந்திய இராஜதந்திர உறவு.**

**கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனையத்தை இந்திய – ஜப்பான் கூட்டில் பொதுத் தனியார் அபிவிருத்தி முயற்சிக்கு கையளிக்கும் விடயத்தில் கொழும்பின் திடீர் சறுக்கல் – பின்வாங்கல் – இந்தியத் தரப்புக்கு பெரும் அதிருப்தியையும் விசனத்தையும் எரிச்சலையும் தந்திருக்கின்றது.**

**இந்த விடயம் பகிரங்க ஆராய்வுகளுக்கு வந்த பின்னர், இந்தியாவுக்கு அதனை வழங்குவதில்லை என்று இலங்கை எடுத்த தீர்மானம், இந்திய உப கண்ட பிராந்தியத்தில் இந்தியாவின் தனித்துவச் செல்வாக்குக்கு நேரடியாக விடுக்கப்பட்ட இராஜதந்திர சவாலாகும்.**

**கடந்த ஆண்டு நடுப்பகுதி வரையில் இந்தப் பிராந்தியத்தில் அரசியல் ரீதியாக வலுவாகக் காலைப் பதித்து, அதிகாரத்தைப் பற்றி நின்றவராக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியே நோக்கப்பட்டார்.**

**அதற்கு முதலாண்டில் வலிமையான மேலதிக வாக்குகள் பலத்துடன் அதிகாரத்துக்கு வந்த இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கடந்த ஒகஸ்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்துடன் சட்டவாக்கல் அதிகாரத்தையும் கைப்பற்றியமையை அடுத்து, இந்தப் பிராந்தியத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நிகரான அதிகார வலிமையுடன் அதிகாரத்தைப் பற்றியிருக்கும் மற்றொரு தேசத் தலைவர் என்ற தகைமையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பெற்றுக் கொண்டார்.**

**இப்போது தென்னாசிய வட்டகையில் சவாலுக்கு உட்படுத்த முடியாத அரசியல், அதிகார வலிமையுடன் ஆட்சியில் இருக்கும் இரு தலைவர்களாக மோடியும் கோட்டாவும் விளங்குகின்றனர்.**

**அவர்களின் ஆட்சிப் பீடங்களுக்கு இடையிலான இராஜதந்திர முரண்பாடு, கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனைய விவகாரத்தில் உச்சம் பெற்றிருக்கின்றது.**

**இந்திய – ஜப்பான் கட்சித் திட்ட இணக்கப்பாட்டிலிருந்து இலங்கை ஒரு தலைப்பட்சமாக வெளியேறியிருப்பது, இந்தியாவின் வல்லாதிக்கத்துக்கும் அங்கு பலமாகவுள்ள மோடி அரசாங்கத்தின் இராஜதந்திரத்துக்கும் பெரும் பின்னடைவு மட்டுமல்லாமல், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை நடைமுறையாக்கத்துக்கு சர்வதேச உறவாடல் முறைமையில் விடுக்கப்பட்ட அரசியல் சவாலாகவும் அர்த்தம் பண்ணப்பட வேண்டியது என்பது கவனிக்கத்தக்கதாகும்.**

**இந்தத் திடீர் முடிவை – கூட்டு இணக்கத்திலிருந்து பின்வாங்கும் தீர்மானத்தை – நடைமுறை நெருக்கடிகள் காரணமாகவன்றி, அரசியல் காரணங்களுக்காகவும், ஆளும் கட்சி மீதான ஜனாதிபதி கோட்டாபயவின் அதிகாரத் தலைமைக்கு உள்ள செல்வாக்குப் பிடிமானமின்மை மற்றும் ஆளுமைக் குறைவு காரணமாகவும் எடுக்க வேண்டியதாயிற்று என்று விளக்கம் கூறப்படுவது புதுடில்லிக்கு மேலும் நெருக்கடி தரும் விவகாரம் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.**

**ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட முக்கூட்டு இணக்கத்தின்படி முனையத்தை இந்தியாவுக்குக் கையளிப்பதற்கு எதிராகத் துறைமுக தொழிற்சங்கங்களும், இடதுசாரிக் கட்சிகளும் மட்டுமன்றி, ஆளும் கட்சிக்குள்ளும் பலமான தரப்புகளும் கொதித்து எழுந்தன. இந்த எதிர்ப்பு எழுச்சி இயல்பாக எழுந்த அரசியல் விவகாரமாகப் புதுடில்லி இதனை அவதானிக்கவில்லை. இதற்குப் பின்னால் வலுவான அரூபக் கரமாக சீனாவின் நேரடிப் பங்களிப்பு – நிதி மற்றும் இராஜதந்திர தலையீட்டு வடிவத்தில் – தாராளமாக இருந்துள்ளது என்று புதுடில்லி அரசியல் தலைமை கருதுவதாகத் தெரிகின்றது.**

**அத்தகைய பின்புலத்தில் –**

**இந்தத் தீவில் மிக வலிமையான அரசியல் செல்வாக்குப் பிடியுடன் அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஆளுங் கட்சி மீதான தமது செல்வாக்கு மற்றும் ஆளுமைக் குறைவை மட்டும் காரணம்காட்டி பொதுக் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளில் இருந்து இலகுவில் விலக அனுமதிப்பது என்பது, புதுடில்லிக்கு எதிர்காலத்தில் பலத்த பாதிப்புகளை – நெருக்கடிகளை – சிக்கல்களை – வாங்கித் தரக் கூடியது என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

**ஆளும் தரப்புக்குள்ளும், பொதுமக்கள் மத்தியிலும் அதிருப்தி நிலவுகின்றது, எதிர்ப்பு எகிறுகின்றது என்று காரணம் காட்டி பல விடயங்களிலிருந்தும், பொறுப்புகளில் இருந்தும் கொழும்பு இலகுவில் விலகிக் கொள்வதற்கான முன்னுதாரணமாக இந்த செயற்போக்கைக் காட்ட முடியும்.**

**இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் வாசகங்களை நடைமுறைப்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்திலும் அதன் மூலமான அதிகாரப் பகிர்விலும் ஏற்கனவே பல விடயங்கள் நீக்கப்பட்டு அந்த அதிகாரப் பகிர்வு முறைமையே கொழும்பினால் நீர்த்துப்போகச் செய்யப்பட்டுள்ளது.**

**இதே காரணங்களை – ஆளும் கட்சிக்குள் அதிருப்தி, தெற்கு சிங்கள மக்களின் கடும் எதிர்ப்பு என்று பல நியாயப்பாடுகளை – முன்னிறுத்தி 13 ஆவது திருத்தம் அடியோடு அகற்றப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.**

# அரசியல் நாடகங்கள் என்னிடத்தில் இல்லை!

## கோட்டா கடும் சீற்றம்



அரசியல் நாடகங்களை அரங்கேற்றியோ அல்லது ஊடகங்களில் பிரசாரங்களை முன்னெடுத்தோ நான் ஜனாதிபதியாகியவன் அல்லன் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தெரணியகலையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர் –

ஜனாதிபதி நேரடியாக கிராமங்களுக்குச் செல்ல வேண்டிய தேவை கிடையாது. இது அரசியல் நாடகமாகும் என்று விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அரசியல் நாடகங்கள் அரங்கேற்றப்படுவது தேர்தல் காலங்களிலாகும். அதற்கு இன்னும் 4 ஆண்டுகள் உள்ளன.

ஏன் ஜனாதிபதி கிராமங்களுக்குச் செல்கின்றார் ? அதற்கு அதிகாரிகள் இருக்கிறார்கள் அல்லவா என்று சிலர் சமூக வலைத்தளங்களில் பதிவுகளை செய்திருக்கிறார்கள். அதிகாரிகள் ஊடாக மக்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்ளும் முறைமையும் உள்ளது. ஆனால் நேரடியாக மக்களை சென்று சந்திப்பதே நான் பின்பற்றும் முறைமையாகும்.

கிராமப்புறங்களிலுள்ள அப்பாவி மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதை தவறாக புரிந்து கொள்ளவோ அல்லது திரிபுபடுத்தவோ கூடாது.

மனிதாபிமானத்தை மக்களுக்கான வேலைத்திட்டங்களுக்காக பயன்படுத்த வேண்டும். அரசியல் நாடகங்களை அரங்கேற்றி அல்லது ஊடகங்களில் பிரசாரங்களை முன்னெடுத்து நான் ஜனாதிபதியாகியவன் அல்லன். வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதன் ஊடாக மக்கள் மத்தியில் செல்லமுடியும். – என்றார்.

# எழுச்சிப் பேரணிக்கு பிரிட்டனில் பேராதரவு!







பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான உரிமைப் போராட்டத்துக்கு பிரிட்டனிலும் பேராதரவு வழங்கப்படுகிறது.

பிரித்தானிய மக்களின் தன்னெழுச்சி அறை கூவலுக்கு செயல் வடிவம் கொடுக்கும் தார்மீக வேண்டுகைக்கமைவாக பிரித்தானியாவின் வீதிகளில் மிகப் பெரும் கவனவீர்ப்பு வாகனப் பேரணியை சுகாதார விதிமுறைகளுக்கமைய போராட்டக் களத்தை நெறிப்படுத்தி வருகின்றது.

பிரித்தானியாவில் இரண்டு இடங்களில் இருந்து பேரணி ஆரம்பமாகியது.

# சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உருத்தானது அல்ல இலங்கை!

## அருட்தந்தை செபமாலை அடிகளார் தெரிவிப்பு



ஈழ தமிழரின் எழுச்சி என்பது வரலாற்று அரசியல் கால கட்டத்தில் இன்றியமையாதது என அருட்தந்தை எஸ்.செபமாலை அடிகளார் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான தமிழர் பேரணி கடந்த சனிக்கிழமை மதியம் மன்னார் நகரை வந்தடைந்தது. இதன் போது வாசிக்கப்பட்ட அறிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிவில் அமைப்புக்கள் முன்னெடுக்கும் போராட்டம், 2009 ஆண்டு ஆயுதம் மௌனிக்கப்பட்ட பின்னர் வடக்கு கிழக்குத் தமிழர் தாயகப் பகுதிகளில் கட்டவிழ்த்துவிடப்பட்ட ஈழ படுகொலையை முன்னிறுத்தியும், தமிழின படுகொலைக்கு நீதி வேண்டியும் முஸ்லிம் மலையக ஈழ தமிழரின் கூட்டிருமையை வலியுறுத்தியும் நீதிக்கான பேரணி நான்காவது நாளாக மன்னாரில் வந்தடைந்துள்ளது.

சிங்கள அரசு ஸ்ரீலங்காவை சிங்கள பௌத்த ஒருமை பண்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான காலணித்துவ செயற்பாடுகளை வடக்கு கிழக்கு தமிழர் தாயக பகுதிகளில் அரசியல் நிகழ்ச்சி திட்டத்தினூடும், அரசு இயந்திரத்தினோடும் நிரல்படுத்தியும் செயற்படுத்தியும் வருகின்றது.

தமிழ்த் தேசிய அரசியலை நீக்க பல்வேறு தரம்புகளும் செய்து வருகின்றன என்பது யாவரும் அறிந்தது. ஈழத் தமிழரின் எழுச்சி என்பது வரலாற்று அரசியல் கால கட்டத்தில் இன்றியமையாதது.

ஈழத் தமிழர் இருப்பை உறுதி செய்தல். ஸ்ரீலங்கா சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் உரித்தானது அல்ல என்று கூறிக்கொள்வதோடு தம்மை எண்ணிக்கையில் குறைவாக உள்ள மக்களின் நாடு என்று கூறிக்கொள்வதோடு இதனை வலியுறுத்திக் கொள்கின்றோம்.

ஈழத் தமிழினம் தனது இருப்பிற்காக வெளியிலிருந்து வரும் எதிர்ப்புகளை பல தசாப்தங்களாக சந்தித்து வரும் பல போராட்ட வடிவங்களைப் பெற்றுள்ளது.

ஈழத் தமிழினத்துக்கான பேராதரவு அதிகரித்து வருகின்ற நிலையில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்துக்கு அரசியல் பாகுபாடு இன்றி சிவில் அமைப்பினருக்கு எத்தடை வரினும் ஒத்துழைப்பு வழங்குங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு


# டிரம்பின் பொய் பிரச்சாரங்களால் அமெரிக்க மக்களின் வரிப்பணம் வீண்



நவம்பர் மாதம் நடந்த அதிபர் தேர்தல் குறித்த ட்ரம்பின் பொய்யான பரப்புரைகளால், அமெரிக்க மக்களின் வரிப்பணம் சுமார் இலங்கை மதிப்பில் 950 கோடி ரூபாய் வீணாகி விட்டதாக, அரசு புள்ளிவிவரங்களின் அடிப்படையில் வொஷிங்டன் போஸ்ட் நாளிதழ் தெரிவித்துள்ளது.

தேர்தல் நடவடிக்கைகள் குறித்து ட்ரம்ப் மற்றும் அவரது ஆதரவாளர்கள் கூறிய பொய்யான குற்றச்சாட்டுகளை விசாரிக்க, அரசு அமைப்புகள் தினமும் செலவழித்த தொகைகளை பட்டியலிட்டதில் இது தெரிய வந்துள்ளது.

எந்த பலனும் இல்லாத சட்டவழக்குகளை தொடரவும், தேர்தல் அலுவலர்களுக்கு அச்சுறுத்தல் உள்ளது என்ற ட்ரம்பின் போலியான குற்றச்சாட்டுகளால் கூடுதல் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தவும் இந்த தொகை செலவழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது போன்று அமெரிக்க நாடாளுமன்றத்தை டிரம்ப் ஆதரவாளர்கள் தாக்கியதால் ஏற்பட்ட சேதங்களை சீரமைக்கவும், தேசிய பாதுகாப்பு படையினரை கூடுதலாக நியமிக்கவும் இந்த நிதி தேவைப்பட்டதாக கூறப்படுகிறது.

# ஈகுவடோர் நாட்டில் இன்று அதிபர் தேர்தல்

ஈகுவடோர் நாட்டில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அதிபர் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் இன்று நடைபெறுகிறது.

முன்னதாக நேற்று தேர்தல் நடத்துவதற்கான அனைத்து பணிகளும் துப்பாக்கி ஏந்திய வீரர்கள் பாதுகாப்புடன் மேற்கொள்ளப்பட்டன.

தேசிய தேர்தல் கவுன்ஸில் அதிகாரிகள் தேர்தல் பொருட்களை அனுப்பும் பணிகளை நேரில் பார்வையிட்டனர்.

இந்த தேர்தலில் வெற்றி பெறும் அதிபர் வருகிற மே மாதம் பதவி ஏற்பார்.

மேலும் கொரோனாவால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் உட்பட பல்வேறு பிரச்சினைகளை புதிய அதிபர் எதிர்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மியன்மாரில் இராணுவ சதிக்கு எதிராகவும், ஆங் சான் சூகியை விடுவிக்க கோரியும் ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்ட பேரணி



மியான்மாரில் ராணுவ சதிக்கு எதிராகவும், தேசிய தலைவர் ஆங் சான் சூகியை விடுவிக்கவும் கோரி ஆயிரக்கணக்கானோர் சாலைகளில் ஆர்ப்பாட்ட பேரணி நடத்தினர்.

சிவப்பு நிற பலூன்களை ஏந்தி சென்ற அவர்கள், யாங்கூன் நகரின் சாலைகளில் திரண்டு, ராணுவத்திற்கு எதிரான முழக்கங்களை எழுப்பினர்.

ராணுவ ஆட்சி வேண்டாம், ஜனநாயகமே எங்களுக்கு தேவை என அவர்கள் முழங்கினர். அப்போது ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே லேசான மோதல் ஏற்பட்டது.

மியான்மரில் இணையதள சேவை துண்டிக்கப்பட்டுள்ளதால், ராணுவத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் சமூகவலைத் தளங்களில் பெரிய அளவில் பரவவில்லை.

# உத்தரகண்ட்டில் வெள்ளப்பெருக்கு 150 பேர் வரை உயிரிழப்பு என அச்சம்

இந்தியாவின் உத்தரகண்ட் மாநிலத்தில் பனிச்சரிவால் தவுளிகங்கா ஆற்றில் திடீரென ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 150 பேர் வரை உயிரிழந்திருக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேசிய மாநிலப் பேரிடர் மீட்புப் படையினரும், இந்தோ திபெத் எல்லைக் காவல் படையினரும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

உத்தரகண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தில் அதிகப் பனிப்பொழிவால் மலைப்பகுதியில் படிந்திருந்த பனிப்பாளங்கள் திடீரெனச் சரிந்தன. பனிப்பாளங்கள் உருகித் தவுளிகங்கா ஆற்றில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அதிவேகத்தில் வந்த வெள்ளத்தால் அணை உடைந்ததில் ரிசிகங்கா நீர்மின்நிலையம் முற்றிலும் சேதமடைந்தது.

திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் தவுளிகங்கா, அலக்நந்தா ஆற்றங்கரையில் உள்ள மக்கள் வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்படி உத்தரகண்ட் அரசு எச்சரிக்கை விடுத்தது. எனினும் நீர்மின் திட்டத்தில் பணியாற்றிய தொழிலாளர்கள், கரையோரப் பகுதி மக்கள் என நூறு முதல் 150 பேர் வரை வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.



கரையோரத்தில் உள்ள சமோலி, ஜோசிமத் உள்ளிட்ட பகுதிகளில் மாநிலப் பேரிடர் மீட்புப் படையினர், இந்தோ திபெத் எல்லைக் காவல் படையினர், தேசியப் பேரிடர் மீட்புப் படையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். வெள்ளப் பகுதிகளில் சிக்கித் தவிப்போரை மீட்க விமானப்படையின் ஹெலிக்கொப்டரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

வெள்ள நிலைமை பற்றி உத்தரகண்ட் முதலமைச்சரிடம் கேட்டறிந்த பிரதமர் மோடி, உள்துறை அமித் ஷா ஆகியோர் மீட்பு நிவாரணப் பணிகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதாக உறுதியளித்தனர்.

# டெல்லியில் பயங்கர தீவிபத்து 20 குடிசைகள் எரிந்து சாம்பல்

இந்தியாவின் தென்கிழக்கு டெல்லியில் ஒக்ஹலா சஞ்சய் காலனியில் குடிசை பகுதி உள்ளது. இங்கு ஏராளமானோர் வசித்து வருகிறார்கள். மேலும் அங்கு துணி களஞ்சியச் சாலைகளும் உள்ளன.

இந்த நிலையில் இன்று அதிகாலை 2 மணி அளவில் குடிசை பகுதியில் திடீரென தீப்பிடித்தது. சிறிது நேரத்தில் தீ குடிசை வீடுகளுக்கு வேக மாக பரவியது. இதனால் தூங்கிக்கொண்டு இருந்த பொது மக்கள் அலறியடித்தபடி எழுந்து வீடுகளில் இருந்து வெளியே ஓடி வந்தனர். தீ கொளுந்து விட்டு எரிந்ததால் அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சி அளித்தது.

இதுகுறித்து தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக 30 வாகனங்களில் தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அப்பகுதியில் சிக்கிய மக்களை தீயணைப்பு வீரர்கள் மீட்டனர். தீயை கடும் போராட்டத்துக்கு பின்னர் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த பயங்கர தீ விபத்தில் 20 க்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்து நாசமானது. அனைத்து பொருள்களும் தீயில் கருகின.

இதுகுறித்து பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறும் போது, 'குப்பையில் வீசப்பட்ட வீணான துணியில் இருந்து தீ பரவியுள்ளது. 20 இற்கும் மேற்பட்ட குடிசை எரிந்து விட்டன. ஒரு லொறியும் தீப்பிடித்து எரிந்துள்ளது.

தீப்பிடித்தபோது குடிசைக்குள் சிக்கிய 40 பேரை தீயணைப்பு வீரர்கள் மீட்டுள்ளனர். அதேநேரம் முதியவர் ஒருவரை காணவில்லை என அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் இருந்து 5 லட்சம் டோஸ் தடுப்பூசி ஆப்கானிஸ்தானுக்கு இன்று சென்றடைந்தது

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் கொரோனா தடுப்பூசி மருந்துகளை இந்தியா நல்லெண்ண அடிப்படையில் அண்டை நாடுகள் மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் உள்ள நாடுகளுக்கு வழங்கி வருகிறது. இதன்படி பூட்டான், மாலத்தீவு நேபாளம், வங்காளதேசம், மியன்மார், மொரிசியஸ், சீஷெல்ஸ், இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு இலவசமாக தடுப்பு மருந்தை அனுப்பி வைத்தது.

அவ்வகையில், ஆப்கானிஸ்தான் நாட்டிற்கு இன்று 5 லட்சம் டோஸ் தடுப்பூசி மருந்து அனுப்பி வைக்கப்பட்டது. மும்பையில் இருந்து ஏர் இந்தியா விமானத்தில் அனுப்பி வைக்கப்பட்ட மருந்து காபூல் சென்றடைந்தது. இத்தகவலை டுவிட்டர் மூலம் பகிர்ந்துள்ளார் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர். எப்போதும் நமது நட்பு நாடுகளுக்கு துணை நிற்போம் என்றும் அவர் கூறி உள்ளார்.




# நவால்னிக்கு ஆதரவான போராட்டத்தில் பங்கேற்ற 3 ஐரோப்பிய தூதர்களை வெளியேற்றியது ரஷ்யா

ரஷ்ய அதிபர் புடினையும், அவரது அரசின் ஊழலையும் கடுமையாக விமர்சித்து வந்த எதிர்க்கட்சி தலைவரான அலெக்சி நவால்னி கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ரசாயன தாக்குதலுக்கு ஆளானார்.

இதில் கோமா நிலைக்குச் சென்ற நவால்னி, ஜேர்மனியில் சிகிச்சை பெற்று குணமடைந்தார். அதனைத் தொடர்ந்து கடந்த மாதம் 17 ஆம் திகதி ஜேர்மனியில் இருந்து ரஷ்யா திரும்பிய அவரை விமான நிலையத்தில் வைத்து பொலிஸார் கைது செய்தனர்.

இதையடுத்து மோசடி வழக்கு ஒன்றில் பரோல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் நவால்னிக்கு மூன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து ரஷ்ய நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை எனக்கூறி ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவை கண்டித்தன. மேலும் நவால்னியை உடனடியாக விடுவிக்கவில்லை என்றால் பொருளாதார தடைகள் உள்ளிட்ட கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் உறுப்பினர்கள் எச்சரித்தனர்.

அலெக்சி நவால்னியை விடுதலை செய்யக்கோரி கடந்த மாதம் 23 மற்றும் 31 ஆகிய திகதிகளில் ரஷ்யாவில் மிகப்பெரிய அளவில் போராட்டங்கள் நடைபெற்றன. போராட்டத்தில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கானோரை பொலிஸார் கைது செய்தனர்.

இதற்கிடையே, 23 ஆம் திகதி நடைபெற்ற போராட்டத்தில் ஜேர்மனி, சுவீடன் மற்றும் போலந்து ஆகிய நாடுகளின் தூதர்கள் பங்கேற்றதாக அண்மையில் தகவல் வெளியானது. இதனை ரஷ்யா வன்மையாக கண்டித்தது.

இந்நிலையில், சட்டவிரோத போராட்டங்களில் பங்கேற்றதாகக் கூறி மேற்கூறிய 3 நாடுகளின் தூதர்களையும் ரஷ்யா நேற்று வெளியேற்றியது.

ரஷ்யாவின் இந்த நடவடிக்கைக்கு சம்பந்தப்பட்ட 3 நாடுகள் தவிர இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளும், ஐரோப்பிய கூட்டமைப்பும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# படை திரட்டி தடை தகர்த்த தமிழர் சேனை

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான நீதிக்கான பேரெழுச்சிப் பேரணி இன்று கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்தை வந்தடைந்தபோது.....


































# படை திரட்டி தடை தகர்த்த தமிழர் சேனை



# தெற்காசியாவின் மிக நீளமான 'நீர்ப்பாசன சுரங்கப்பாதை' நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்தார் ஜனாதிபதி!





28 கி.மீற்றர் நீளமுள்ள தெற்காசியாவின் மிக நீளமான 'நீர்ப்பாசன சுரங்கப் பாதை' நிர்மாணப் பணிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் அனுராதபுரம், பலுகஸ்வெளவில் ஆரம்பித்து வைத்தார்.

5 ஆயிரம் குளங்களைப் புனரமைக்கும் 'நீர்ப்பாசன சுபீட்சம்' திட்டத்துடன் இணைந்ததாக நடைமுறைப்படுத்தப் படும் வட மத்திய மாகாண பிரதான கால்வாய்த் திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் இந்த சுரங்கப்பாதை நிர்மாணிக்கப் படுகிறது. மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் 6 ஆவது மற்றும் இறுதி திட்டமாக வட மத்திய மாகாண பிரதான கால்வாய் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மொரகஹகந்த மற்றும் களு கங்கை நீர்த்தேக்கங்களிலிருந்து நீரை ரஜரட்டவுக்கு கொண்டுசெல்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இது சூழல் நட்பு அபிவிருத்தித் திட்டமாக வடிவமைக்கப் பட்டுள்ளது. மொரகஹகந்த மற்றும் களு கங்கை நீர்த்தேக்கங்களிலிருந்து மேலதிக நீர் 65 கி.மீ கால்வாய் வழியாக யகல்ல வரை கொண்டு செல்லப்படுகிறது. கால்வாய் நிர்மாணிக்கும் போது 3 சரணாலயங்களைக் கடந்துசெல்ல வேண்டும். இதன்போது சூழல் மற்றும் வனவிலங்குகளுக்கு சேதம் ஏற்படாமல் தடுக்கும் வகையிலேயே இந்த நீர்ப்பாசன சுரங்கம் அமைக்கப்படுகிறது. எலஹெர கொந்துருவெளவில் ஆரம்பிக்கும் இந்த சுரங்கம் பலுகஸ்வெள மகமீகஸ்வெளவில் முடிகிறது.

ஆறு ஆண்டுகளில் நிறைவுசெய்யப்பட திட்டமிடப்பட்டிருந்த வட மத்திய மாகாண பிரதான கால்வாய்த் திட்டத்தை நான்கு ஆண்டுகளில், 2025 இற்குள் நிறைவுசெய்ய ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். இலங்கை அரசாங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் சுரங்கப்பாதைக்கான மொத்த செலவு 24 கோடியே 40 லட்சம் அமெரிக்க டொலர்களாக்கும்.

'நீர்ப்பாசன சுபீட்சம்' வட மத்திய மாகாண பிரதான கால்வாய் நீர்ப்பாசன சுரங்கப்பாதை நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் அங்குரார்ப்பண விழா அனுராதபுரம், மஹாமீகஸ்வெளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மகா சங்கத்தினரின் பிரித் பாராயணத்துடன் நினைவுப் பலகையை திறைநீக்கம் செய்து ஜனாதிபதி திட்டப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்ப கால மன்னர்களின் வழியை பின்பற்றி வானத்திலிருந்து விழும் மற்றும் கடலை சென்றடையும் நீரை வயல் நிலங்களின் பயிர்செய்கைக்காக பயன்படுத்துவது தற்போதைய அரசாங்கத்தின் நோக்கமாகும் என்று இந்த நிகழ்வில் உரையாற்றிய நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

## நீர்ப்பாசன செழுமை வேலைத்திட்டம் வவுனியாவில் ஆரம்பித்து வைப்பு!





நாடு முழுவதும் 5 ஆயிரம் குளங்களைப் புனரமைக்கும் ஜனாதிபதியின் நீர்ப்பாசன செழுமை வேலைத் திட்டம் இடம்பெற்று வருகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் 100 குளங்கள் புனரமைக்கப் படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு கடந்த சனிக்கிழமை வவுனியா செட்டிக்குளம் பெரியதம்பணை ஆலடிக்குளத்தில் இடம்பெற்றது. இந்தக் குளம் ஒரு கோடி ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

வவுனியா மாவட்டச் செயலாளர் சமன் பந்துலசேன தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன், நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான கே.கே.மஸ்தான், நீர்ப்பாசன திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கே.டி. நீகால் சிறிவர்த்தன, கமநல அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் நாயகம் எச்.எம்.எல் அபேரத்ன, செட்டிகுளம் பிரதேச சபைத்தலைவர் சு.ஜெகதீஸ்வரன், வவுனியா வடக்கு பிரதேச சபை தலைவர் ச.தணிகாசலம், வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் இ.பிரதாபன், வவுனியா நகர பிரதேச செயலாளர் கமலதாஸன் மற்றும் கமக்கார அமைப்புக்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## பிணைமுறி மோசடி, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குற்றவாளிகள் நிச்சயமாகத் தண்டிக்கப்படுவார்கள்!

### கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே உறுதி



மத்திய வங்கி பிணை முறி மோசடி மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு எதிர்வரும் ஓரிரு வாரங்களில் நிச்சயம் தண்டனை வழங்கப்படும். அதன் மூலம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படும் என்று கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே தெரிவித்தார்.

நாவலப்பிட்டி பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

குற்றச் செயல்களில் ஈடுபட்டோருக்கு தண்டனை வழங்கப்படாமையால் நாம் தோல்வியடைந்துவிட்டதாகக் கூறுகின்றனர். அவ்வாறு அரசாங்கத்தின் மீது குற்றஞ் சுமத்துபவர்களுக்கு ஒரு விடயத்தைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

கடந்த அரசாங்கத்தில் மத்திய வங்கி பிணை முறி மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக இரு வாரங்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடையோருக்கு நிச்சயம் தண்டனை வழங்கப்படும். அதே போன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராகவும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். எதிர்வரும் ஓரிரு வாரங்களில் இது நிச்சயம் நடைபெறும்.

நாம் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைப் போன்று ஓரிரு தினங்களில் விசாரணைகளை முன்னெடுத்து தண்டனை வழங்குபவர்கள் அல்லர்.

சட்டம் முறையாக செயற்படுத்தப்படும் வரை பொறுமையாக இருப்போம். எனவே, நாம் ஏற்கனவே வாக்குறுதியளித்தமையைப் போன்று மத்திய வங்கி பிணை முறி மோசடியுடன் தொடர்புடையவர்களுக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர்களுக்கும் ஓரிரு வாரங்களில் நிச்சயம் தண்டனை வழங்குவோம். – என்றார்.

வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும்
புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும்
2021 - தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான
வெற்றித்தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகள் ஆரம்பமாகின்றன.
பரீட்சை நாள் – ஞாயிற்றுக்கிழமை
பரீட்சை நிலையம் – நல்லூர் சயன்ஸ் அக்கடமி (முருகன் ஆலயம் முன்பாக)
பரீட்சை நேரங்கள் – காலை 6.00 - 8.15, காலை 8.30 - 10.45, காலை 11.00 - 1.15, மதியம் 1.30 - 3.45, மாலை 4.00 - 6.15
விரும்பிய நேரங்களில் பரீட்சைகள் எழுதலாம்
தரம் 4, தரம் 5 முதலாவது பரீட்சை 07.02.2021 , தரம் 3 முதலாவது பரீட்சை 14.02.2021
பரீட்சைப் பெறுபேறுகள் தரப்படுத்தலுடன் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் வெற்றித்தேர்வு வெற்றியாளர்களாக கௌரவிக்கப்படுவர்.
"வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு" 0775388471 0773126807

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை
மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1977.02.24
மதம் - இந்து V
நட்சத்திரம் - பரணி
பாவம் - 39
கல்வி - பட்டதாரி
தொழில் - நியூசிலாந்து PR
எதிர்பார்ப்பு - நியூசிலாந்து வர விரும்பும் படித்த பெண்.
மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1987.03.18
மதம் - இந்து V
நட்சத்திரம் - சித்திரை 1
பாவம் - 27 1/2
கல்வி - A/L
தொழில் - கனடா PR
எதிர்பார்ப்பு - கனடா வர விரும்பும் மணமகள்.
Kalyanamalai Vada.com திசைசி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள். முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி, பருத்தித்துறை பிரதான வீதி, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.02.2021இல் வெளியிடப்பெற்றது.